




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 16

# மதுபானக் கடைகளில் முன்பக்கமும், பலசரக்குக் கடைகளில் பின்பக்கமும்

## தலைகீழாகிப் போன இலங்கையின் செயற்பாடுகள்



இலங்கையில் கொவிட் வைரசின் தாக்கம் இன்னமும் வீழ்ச்சியடையவில்லை. திரிபடைந்த டெல்டா தொற்றுடன் அடையாளம் காணப்படும் நபர்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை. எனவே சமூக இடைவெளி, முகக்கவசம், சுயதனிமைப்படுத்தலில் இலங்கை கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் படவேண்டும் என மருத்துவர்கள் தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்துவரும் நிலையில், இலங்கை அரசின் அண்மைக்கால செயற்பாடுகள் அனைவரும் விமர்சிக்கும் படியாகவே அமைந்துள்ளது. ஆட்சியிலுள்ளவர்களின் செயற்பாடுகள் தலைகீழாக மாறிப்போயுள்ளது என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் தான், திடீரென மதுபான சாலைகளை திறக்க அரசு அனுமதி வழங்கியமையானது கடும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. நாட்டில் கொவிட் வைரசின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அனைத்துத் தரப்பினரும் செயற்படுகையில், மருத்துவத்துறையினர், சுகாதாரத் தரப்பினர் என கடமைகளின் நிமித்தமாக வீடுகளுக்குக் கூடச் செல்லாமல் இரவு பகலாகக் கடமையாற்றிவரும் நிலையில், மீண்டும் கொவிட் கொத்தணிகளை உருவாக்கும் முயற்சியாக மதுபானக் கடைகளில் மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமல்... (03)

# உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நீடிப்பு

மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு கல்வி பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப பத்திரங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்குள் அனுப்பி நிறைவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அதிபர் சங்கத்தின் தலைவர் நிமல் முதுன் கொட்டுவ தெரிவித்துள்ளார். எனினும், 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்ப பத்திரங்களை அனுப்புவதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மும்பை இந்தியன்ஸை வீழ்த்தி வெற்றியை ருசித்தது சென்னை சூப்பர் கிங்ஸ்



ஐபிஎல் 14வது சீசனில் ஒத்திவைக்கப்பட்ட போட்டிகள் நேற்று முதல் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கின்றன. துபாயில் நேற்று நடந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ்"ம், சிஎஸ்கேவும் மோதின. இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் கெப்டன் ரோஹித் சர்மா முழு ஃபிட்னெஸ்"டன் இல்லாததால் நேற்றைய போட்டியில் ஆடவில்லை. அதனால் பொல்லார்ட் கெப்டன்சி செய்தார். மும்பை அணியில் ஹர்திக் பாண்டியாவும் ஆடவில்லை. (03)

## இலங்கையில் சிறை கைதிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை

**உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன்**



ஜெனிவா மாநாடு நடைபெறுகின்ற இன்றைய சூழ்நிலையில் அநுராதபுர சிறைச்சாலை சம்பவம் கண்டிக்கத்தக்கதும், அதே நேரத்தில் இலங்கைக்கு அவப் பெயரை ஏற்படுத்தும் செயலாகும்.

ஹட்டனில் நேற்று (19) மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசியல் கைதிகள் தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுக்கும் வகையில் ஜனாதிபதி ஆலோசனை குழுவை நியமித்து அவர்களின் பரிந்துரைகளை கோரியுள்ள நிலையில் நடைபெற்ற இந்த சம்பவம் அரசியல் கைதிகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருப்பதோடு, இவர்களின் விடயம் தொடர்பாக அரசாங்கம் அரசியல் காய் நகர்த்தலையே செய்கின்றது. (03)

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

### கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வழமைபோல தொடரும் போதைப்பொருள் பாவனை

இலங்கையில் போதைப் பொருள் பாவனை அல்லது இலங்கைக்கான போதைப்பொருள் கடத்தல் என்பது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் இன்று வட கிழக்குப் பகுதிகளில் பெருவாரியாக இந்தப் போதைப்பொருள் வர்த்தகம். பாவனை என்பன விரிவடைந்துள்ளது. கிராமங்கள். நகரங்கள் என எங்கும் போதைப்பொருளை பயன்படுத்தும் தரப்பினர் நடமாடித் திரிகின்றனர். அவ்வப்போது பொலிசார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் முற்றாக இதுவரை போதைப்பொருள் பாவனையை இலங்கையிலிருந்து ஒழிக்க முடியவில்லை.

கொவிட் அச்சுறுத்தல் பரவல் காலத்திலும் இந்த போதைப் பொருள் வியாபாரம் செவ்வனவே இடம்பெற்று வருகின்றது. இதனால் பல இளைஞர்கள் இன்று தமது வாழ்க்கையினைத் தொலைத் தவர்களாக பித்துப்பிடித்துப்போய் வீதிகளில் அலைவதையும் மாலை நேரங்களில் எதிர்பார்த்துக் காத்திருப் பவர்களையும் அவதானிக்க முடிகிறது.

இதேவேளை. கடந்த 18ஆம் திகதி இலங்கையின் தெற்கே உள்ள சர்வதேச கடற்பரப்பில். 1.575 மில்லியன் ரூபா பெறுமதியான சுமார் 170 கிலோகிராமிற்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் கொண்ட வெளிநாட்டு மீன்பிடி படகு கைப்பற்றப்பட்டு கொழும்பு துறை முகத்திற்கு கொண்டு வரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடல் மார்க்கமாக தொடர்ச்சியாக இவ்வாறு போதைப் பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவண்ணமே இருக்கின்றன.

கிராம மட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்புக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். நகரங்களைத் தாண்டி இன்று கிராமங்கள் இப் பழக்கத் திற்கு அடிமையாகிப்போயுள்ளன. தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும் என்பதுடன். பாடசாலை களில் மாணவர்களின் மத்தியில் விரிவான விழிப்புணர்வுகள் போதைப்பொருட்கள் தொடர்பில் ஏற்படுத்தப்படவேண்டும்.

## இலங்கை மீதான பயணத் தடையை நீக்கியது ஜப்பான்




கொவிட் அபாயம் காரணமாக இலங்கை உட்பட பல நாடுகளுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்க ஜப்பானிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, இன்று (20) முதல் இலங்கை, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுவதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

டெல்டா கொவிட் திரிபு அவதானத்தை கருத்திற் கொண்டு கடந்த ஜூன் மாதம் ஜப்பானிய அரசால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட நாடுகளில் இருந்து வருபவர்கள் விமான நிலையத்தில் கொவிட் பரிசோதனைக்கு மேலதிகமாக மூன்று நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று ஜப்பானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. கொவிட் தொற்று நோய்க்கான சிவப்பு பட்டியலில் இருந்து இலங்கையை நீக்க பிரிட்டன் தீர்மானித்திருந்தது. எதிர்வரும் 22 ம் திகதி முதல் இலங்கையை சிவப்பு பட்டியலில் இருந்து நீக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டில் மேலும் 103 கொவிட் மரணங்கள் நேற்று (19.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,125 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 1733 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 504,491 ஆக அதிகரித்துள்ளது.**

## இளைஞர் கழக சம்மேளன அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை வழங்கிவைப்பு



(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று இளைஞர் கழக சம்மேளன அங்கத்தவர்களுக் கான அடையாள அட்டை வழங்கி வைக்கும் நிகழ்வு மற்றும் எதிர்கால செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக் கிழமை அம்பாறை மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளன பிரதித் தலைவர் எம்.எம்.றுக்சான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது அக்கரைப் பற்று இளைஞர் கழக சம்மேளன நிர்வாக உறுப்பினர்களின் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் கலந்துகொண்டு அக்கரைப்பற்று இளைஞர் கழக சம்மேளன உறுப் பினர்களுக்கான அடையாள அட்டையை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் எதிர் காலத்தில் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழகங்கள் சம்மேளனம் முன்னெடுக்கவேண்டிய செயற் திட்டங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு அக்கரைப்பற்று பிரதேசத்தில் இளைஞர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இன்றும் நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை - அவதானம் மக்களே!

நாட்டில் சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இன்று (20) பல இடங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடக்கு, வடமத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். கொழும்பிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோமீற்றர் வரை காணப்படும். மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிவில் சமூக இயங்குதளத்தின்...

[நேற்றைய இதழின் தொடர்ச்சி...]

எவ்வாறாயினும், இன்னும் பல தமிழ் அரசியல் கைதிகள் குற்றம் சுமத்தப்படாமல் அல்லது தீர்ப்பு வழங்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழித்தல் உரிமைகளை பாதுகாப்பதில் சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள் பின்பற்றப்பட வழி வகுப்பதுடன் இலங்கை அரசாங்கம் அடிப்படை மனித உரிமைக் கொள்கைகள் உள்ளடங்கலாக சட்ட ஆட்சியை மேம்படுத்துவதற்கு கொண்டுள்ள கடப்பாட்டினை செயலில் காண்பிப்பதாக அமையும்.

4. வெளிப்படுத்தல் சுதந்திரம் சமூக நீதிச் செயற்பாட்டாளர்கள், மனித உரி மைகள் அத்துடன் அரசாங்கத்தின் ஊழல், செயற்படாநிலை மற்றும் வினைத்திறனற்ற நிலை என்பவை தொடர்பில் அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் போன்றோர் பல்வேறுபட்ட பாதுகாப்பு முகவர் அமைப்புகளால் விசாரணைகளுக்காக அழைக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் ICCPR சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைகப்பட்டுள்ளனர். மாற்றுக் கருத்துக்களை அடக்கியாள மற்றும் பொதுமக்கள் நலன் கொண்ட விவகாரங்களில் விழிப்புணர்வை வளர்ப்பதில் கடப்பாடு கொண்ட குடியியல் செயற்பாட்டாளர்கள் அத்துடன் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் ஆயுதமாக சட்டம் பயன்படுத்தப்படுவது தொடர்பில் நாம் ஆழ்ந்த கரிசனையினை வெளியிடுகின்றோம். பொதுக் கொள்கைத் தீர்மானங்களை விமர்சனம் செய்தல் மற்றும் அவற்றை கேள்விக்குட்படுத்தல் என்பன ஜனநாயகம் ஒன்று செயற்படுவதற்கான முக்கிய அம்சங்களாக அமைந்துள்ளன. இவ்விடயங்கள் கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைகள் என்ற பெயரில் இடம்பெறும் செயற்பாடுகள் உள்ளடங்கலாக பல வழிகளில் குற்றமான விடயங்களாக மாற்றப்படுகின்றன. மேலும், அமைச்சர்கள் தொடர்ச்சியாக சமூக ஊடகப் பாவனையினை ஒழுங்குபடுத்துமாறு தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றனர், இது பேச்சு மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரங்களுக்கு பாரிய அளவில் குந்தகம் விளைவிக்க வல்லதாகும்.

5. நிலைமாறுகால நீதி கடந்த மார்ச் 2020 இல் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் 30/1 உடனான ஈடுபாடற்ற நிலையை காண்பிக்கும் இலங்கையின் செயற்பாடு நீதி, உண்மை, பாரிய மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கான நட்ட ஈடுகளை வழங்குதல் மற்றும் கடந்த காலத்தைக் கையாளுதல் போன்ற விடயங்களில் போன்ற செயற்பாடுகளில் அரசாங்கம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு தொடர்பில் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. தப்பிப் பிழைத்த குடும்பங்கள் ஏற்பாடு செய்த நினைவேந்தல் நிகழ்வுகளை தொடர்ச்சியாக தடுப்பதற்கு முனையும் அரசாங்கத்தின் செயற்பாடு அரசாங்கம் கடந்த காலத்தைக் கையாள்வதை விடுத்து அதனை புதைக்கும் நோக்கிலேயே செயற்படுகின்றது என்பதனை தெளிவுபடுத்துகின்றது. இதன் காரணமாக, உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோர், விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்வோர் அவர்களின் தேவைகள் மற்றும் கரிசனைகளை தீர்க்கும். அத்துடன் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டும் அரசாங்கத்தின் இயலுமை தொடர்பில் நம்பிக்கையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும், பிரசித்தமான பல பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் கொண்டுவருதல் போன்ற விடயங்களில் காணப்படும் தேக்கநிலை பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் எதிர்பார்ப்பற்ற நிலையில் வாழ்வதற்கு வழிவகுத்துள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் காணாமல் போன நபர்கள் அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட 20வது திருத்தம் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் சுயாதீனத்தன்மைக்கு குந்தகம் விளைவித்துள்ளது. அரசியல் பழிவாங்கல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தவிசாளராக செயற்பட்ட நபர் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டமை அவ்வலுவலகம் தொடர்பான நம்பிக்கையின்மையினை மேலும் அதிகரித்துள்ளது. காணாமல் போனோர் தொடர்பில் தற்போது நடைபெறும் இரண்டு முக்கியத்துவம் மிக்க நீதி விசாரணைகள் தொடர்பில் இந்த ஆணைக்குழு உத்தியோகப்பற்றற்ற நீதிமன்றம் போல் செயற்பட்டுள்ளது, குற்றவாளிகள் அனைத்து குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப்படவேண்டும் என அது தன்னிச்சையாக பரிந்துரை செய்துள்ளது. இது காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பில் நிலவிய நம்பிக்கையை மேலும் குறைத்துள்ளது. அரசாங்கம் பல கதைகளைக் கூறிய போதும், புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் அலுவலகம் காணாமல் போனோரின் குடும்பங்களுடன் எந்த வித ஈடுபாடுகளையும் மேற்கொள்ளாததுடன் காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் காணாமல் போனோர் பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்கு எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை. உதாரணமாக, ஏற்கனவே காணப்படும் தகவல்களின் அடிப்படையில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மேலதிகத் தகவல்களை வழங்குமாறு அக்குடும்பங்களிடம் கோரப்பட்டுள்ளது.

[அடுத்த இதழில் தொடரும்...]

## மதுபானக் கடைகளில்...

மதுபானக் கடைகளில் முண்டியடிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மழை வெயில் பாராமல் மக்களது இந்த அசமந்தப்போக்கானது நாட்டில் கொவிட் அச்சுறுத்தல் இருக்கும் நிலையில், எதிர்வரும் நாட்களில் மதுபானசாலைக் கொத்தணிகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

அத்தியாவசிய உணவுப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் கடைகளின் பின்பக்கமாகச் சென்று பொருட்களை வாங்கிக் கொண்டிருக்க, மதுபானசாலைகளில் முன்பக்கமாக கடைக் கதவுகளை திறந்து விற்பனை செய்யும் நிலை நமது நாட்டில் உருவாகியுள்ளது.

இவ்வருட இறுதிப்பகுதிக்குள்ளாவது நாட்டில் கொவிட் வைரசின் பரவலைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவைப்பாடு இலங்கைக்கு இருக்கிறது. நாட்டினது பொருளாதார வீழ்ச்சி என்பதற்காக அரசு இவ்வாறு தலைகீழாக செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

## மும்மை இந்தியன்ஸை...

– அப்துல் ஜெப்பார் அப்துல்லா –

டொஸ் வென்ற சிஎஸ்கே கெப்டன் தோனி பெட்டிங்கை தேர்வு செய்தார். முதலில் பெட்டிங் ஆடிய சிஎஸ்கே அணியின் தொடக்க வீரர் டுப்ளெசிஸை முதல் ஓவரிலேயே டிரெண்ட் போல்ட் டக் அவுட்டாக்கி அனுப்ப, 2வது ஓவரில் மொயின் அலியை ஆடம் மில்னே டக் அவுட்டாக்கினார். ரெய்னாவை 3வது ஓவரில் போல்ட் வீழ்த்த, வெறும் 7 ரன்னுக்கு 3 விக்கெட்டுகளை இழந்தது சிஎஸ்கே. தோனியும் 3 ரன்னில் ஆட்டமிழந்தார்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நிலைத்தும், அதேவேளையில் அதிரடியாகவும் ஆடிய தொடக்க வீரர் ருதுராஜ் கெய்க்வாட் அரைசதம் அடித்தார். அவருடன் இணைந்து நன்றாக ஆடிய ஜடேஜா 26 ரன்னில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ருதுராஜுடன் ஜோடி சேர்ந்த பிராவோ, அதிரடியாக ஆடி 8 பந்தில் 3 சிக்ஸர்களுடன் 23 ரன்கள் அடித்தார். அதிரடியாக ஆடி அரைசதம் அடித்த ருதுராஜ் கெய்க்வாட், கடைசி ஓவரின் கடைசி பந்தில் சிக்சர் அடித்து இன்னிங்ஸை முடிக்க, 20 ஓவரில் 156 ரன்கள் அடித்தது சிஎஸ்கே அணி. கெய்க்வாட் 58 பந்தில் 88 ரன்களை விளாசி கடைசி வரை களத்தில் இருந்தார்.

157 ரன்கள் என்ற இலக்கை விரட்டிய மும்பை அணி தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்தது. தொடக்க வீரர்கள் டி கொக் (17), அன்மோல்ப்ரீத் சிங் (16) ஆகிய இருவரும் சொற்ப ரன்களில் தீபக் சாஹரின் பந்தில் ஆட்டமிழந்தனர். சூர்யகுமார் யாதவ் (3), இஷான் கிஷன் (11), பொல்லார்ட் (15) ஆகியோரும் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். சிறப்பாக விளையாடிய சவுரப் திவாரி, அரைசதம் அடித்தார். ஆனால் அவருக்கு மறுமுனையில் இருந்து ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. 20 ஓவரில் 136 ரன்கள் அடித்த மும்பை அணி 20 ரன் வித்தியாசத்தில் தோற்றது. இந்த வெற்றியையடுத்து 12 புள்ளிகளுடன், புள்ளி பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது சிஎஸ்கே அணி.

## இலங்கையில் சிறைக்...

ஜெனிவா மாநாடு நெருங்குகின்ற சூழ்நிலையில் ஜனாதிபதி அமைத்துள்ள ஆலோசனை குழு கேள்விக்குறியாகியுள்ளது. குறித்த விடயத்தில் அரசாங்கம் அரசியல் கைதிகளின் கோரிக்கையான அவர்களை அநுராதபுர சிறைச்சாலைகளிலிருந்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும் என கோரிக்கையை உடனடியாக பரீசிலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத வழிபாடுகளுக்கும். அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் தடை விதித்திருக்கும் அரசாங்கம் மதுபானசாலைகளை திறந்து வைத்திருப்பது கேலிக்கூத்தான ஒரு செயலாகும். இதன் மூலம் நாட்டில் மேலும் மக்களின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டு குடும்பங்க ளில் தேவையற்ற பிரச்சினை உருவாக்குவதற்கு அரசாங்கமே அங்கீகாரம் வழங்கியுள்ளதா? 2.000 ரூபாய் கொடுப்பனவு மலையக மக்களுக்கு கிடைக்காத சூழ்நிலையில் மதுபானசாலைகளை திறந்து மேலும் அவர்களை பொருளாதார சிக்கலுக்குள் தள்ளிவிட்டு இருக்கின்றது இந்த அரசாங்கம்.

சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சீனாவின் குப்பைகளை இலங்கைக்கு கொண்டு வந்து கொட்டுவதற்கு அனுமதிக்க முடியாது. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசளையானது இலங்கை மண்ணுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கருத்து வெளியாகியிருக்கும் சூழ்நிலையில் அதனை விவசாயிகள் எவ்வாறு பாவிப்பது. எனவே இதற்கு எதிராக விவசாயிகள் குரல் கொடுக்க முன்வர வேண்டும். நானும் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.அரசாங்கம் விவசாயம் தொடர்பாக தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற பொழுது அது தொடர்பாக விவசாய திணைக்களம். விவசாயிகள் அனை வருடனும் கலந்தாலோசித்து சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் காலத்தில் இலங்கையில் உணவு பஞ்சம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். - மலையக நிருபர் கிரிஷாந்தன் -

## யுரேனிய செறிவூட்டல் ஆலையை விரிவுபடுத்தும் வடகொரியா



வடகொரியா தனது அணுசக்தி வளாகத்தில் உள்ள யுரேனியம் செறிவூட்டல் ஆலையை விரிவாக்கம் செய்யும் செயற்கைகோள் புகைப்படங்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த மாக்ஸர் விண்வெளி நிறுவனம், வட கொரியாவின் யோங்பியோன் அணுசக்தி வளாகத்தில் 10,760 சதுரடி பரப்பளவில் கட்டுமாணப் பணிகள் நடைபெறும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் அணு ஆயுதங்களில் பயன்படுத்தப்படும் யுரேனியத்தின் உற்பத்தியை வடகொரியா 25 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்தனர். அணு ஆயுதங்களைத் தாங்கி தொலை தூரம் சென்று தாக்கக்கூடிய அதிநவீன ஏவுகணைகளை வட கொரியா சமீபத்தில் சோதனையிட்டது ஜப்பான் மற்றும் தென் கொரியாவை அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

## 585 கி.மீ அப்பாலிருந்து பூமியை ரசித்த சுற்றுலாப் பயணிகள்

அமெரிக்காவிலிருந்து விண்வெளிக்கு சுற்றுலா சென்ற 4 பேர் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பினர். விண்வெளிக்கு ஆய்வுக் காக மட்டுமல்லாமல் சுற்றுலாவும் செல்லலாம் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதன்படி அமெரிக்காவிலிருந்து 4 பேர் ஸ்பேஸ் எக்ஸ் (SpaceX) விண்கலம் மூலம் விண்வெளிக்கு சுற்றுலாவாக சென்றனர்.

பூமியிலிருந்து 585 கிலோ மீட்டர் அப்பால் சென்ற 4 பேரும் அங்கிருந்து பூமிப்பந்தை கண்டு ரசித்தனர். மேலும் விண்வெளியில் புவி ஈர்ப்பு விசை மாறுபாட்டின் தாக்கத்தையும் உணர்ந்தனர். 3 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு அமெரிக்காவின் ஃப்ளோ ரிடா அருகிலுள்ள அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக பராசூட் மூலம் இறங்கினர். உற்சாகத்தில் திளைத்த அவர்கள் படகு மூலம் கரைக்குத் திரும்பினர். அமெரிக்காவை சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் தானும் தனது விருந்தினர்கள் 3 பேரும் என பெரும் தொகையை கட்டணமாக செலுத்தி விண்வெளி சுற்றுலா சென்றிருந்தார். அடுத்து வரும் மாதங்களில் மேலும் பல விண்வெளி சுற்றுலா பயணங்கள் நிகழ உள்ளன.



## நடுவானில் திடீரென பற்றியெரிந்த பிரான்ஸ் விமானம்

சீனாவில் இருந்து பிரான்ஸ் நோக்கி புறப்பட்ட பயணிகள் விமானத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சீன தலைநகர் பீஜிங்கில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நோக்கி பயணித்த எயார்பிரான்ஸ் விமானத்தில், நடுவானில் பயங்கர சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது. இந்தச் சத்தத்தை தொடர்ந்து விமானத்தில் திடீரென கரும்புகையுடன் தீ பற்றி எரிந்தது. துரிதமாக செயல்பட்ட விமானி உடனடியாக விமானத்தை பீஜிங் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கினார்.

இதனால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இந்த சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், இந்த வெடிவிபத்து விமானத்தின் வால்பகுதியில் ஏற்பட்டதாகவும் முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

## டிரம்ப் கொண்டுவந்த புதிய முறையை ரத்து செய்தது கலிபோர்னியா நீதிமன்றம்



அமெரிக்க விசா தொடர்பான முன்னாள் அதிபர் டிரம்ப் கொண்டுவந்த புதிய முறையை ரத்து செய்து கலிபோர்னியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் குடியுரிமை பெறாமல் தங்கிப் பணிபுரிவதற்கு அந்த நாடு எச்–1பி விசா வழங்கி வருகிறது. இதற்கு பெரும் வரவேற்பு உள்ளது. இந்த விசா முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்கிற வகையில் குலுக்கல் முறையில் வழங்கப்படுகிறது. இந்த விசாவைத்தான் வெளிநாட்டினரை பணியாற்ற அமெரிக்க நிறுவனங்கள் நம்பியுள்ளன.

இதனையடுத்து, ஒவ்வொரு ஆண்டும் 65 ஆயிரம் பேருக்கு இந்த விசா வழங்கப்படுகிறது. மேலும், அந்த நாட்டில் உயர்படிப்பு படித்த வெளிநாட்டினர் 20 ஆயிரம் பேருக்கும் இந்த விசா தரப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது, அமெரிக்க பொருட்களையே வாங்குவோம், அமெரிக்கர்களுக்கே வேலைவாய்ப்பு என்று முழங்கினார். மேலும், ஊதியத்தின் அடிப்படையில்தான் எச்–1பி விசா என புதிய விதியைக் கொண்டு வந்தார். அதிக சம்பளம் வாங்குவோருக்குத்தான் அமெரிக்க விசா வழங்கப்படும் என்பதால், இது வெளிநாட்டினர் அமெரிக்காவில் வேலைவாய்ப்பு பெறுவதில் தடைக்கல்லாக அமைந்தது. இதனை, எதிர்த்து கலிபோர்னியா வடக்கு மாவட்ட கோர்ட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெப்ரே ஒயிட், டிரம்ப் கொண்டு வந்த மாற்றத்தை ரத்து செய்து அதிரடியாக தீர்ப்பு அளித்துள்ளார்.

## இந்தியா: சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க மத்திய அரசு முடிவு

இந்தியாவில், கொவிட் பாதிப்பு குறைந்து வரும் சூழ்நிலையில், ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு, சுற்றுலா பயணிகளை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கொவிட் பரவல் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால், மிகவும் பாதிக்கப்பட்ட சுற்றுலா, சேவை மற்றும் விமானத்துறைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், முதல் 5 லட்சம் சுற்றுலா பயணிகளுக்கு, விசாவை இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாகவும், இந்தியா வரும் பயணிகளுக்கான விதிமுறைகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சக அதிகாரிகள் விரிவாக ஆலோசனை நடத்தி வருவதாகவும், அடுத்த 10 நாட்களுக்குள் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் எனக்கூறப்படுகிறது.